# முப்பது

“மாதம் முழுவதும் முதல் தேதியாக இருந்துவிடாதா?” எல்லா நாளும் ஞாயிற்றுக் கிழமையாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படும் எனது யூகேஜி மகள் தான் நினைவுக்கு வந்தாள். அத்தோடு பாக்கி இருக்கும் அவள் ஸ்கூல் ஃபீஸ்ஞாபகம் வந்தது.

“ச்சே என்னடா வாழ்க்கை இது... பிச்சைக்காரனா இருந்தாக் கூட நிம்மதியா இருக்கலாம். இந்த லட்சணத்துல குடும்பம் வேற.” மெதுவாக அலுவலக உடைக்கு மாறினேன். சட்டை அயர்ன் பண்ணாமல் இருந்தது. மாதக் கடைசியில் வீட்டில் தான் அயர்ன்.

“என்னங்க பக்கத்து வீட்டு சிலிண்டர் தான் ஓடிட்டு இருக்கு. அவங்களுக்கு அடுத்த சிலிண்டர் பதிஞ்சு வைக்கணுமாம்.” என மறுபாதி எச்சரிக்கை அனுப்பியது.

“அப்பா காசு குடுப்பா" சந்தானம் கெஞ்சியது. பர்ஸில் இருந்த ஒரே ஐந்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தேன். என் கோபமும், எரிச்சலும் அந்தப் பிஞ்சுக்குத் தெரியக்கூடாது என்று ப்ளாஸ்டிக் புன்னகை ஒன்றை முகத்தில் ஒட்டிக் கொண்டேன்.

பர்ஸில் இருந்த ட்ரைவிங் லைசன்ஸ் - அதில் என் கல்லூரிக்கால முகம் - என்னைப்பார்த்துப் பரிகசிப்பது போல இருந்தது. தூக்கிக் கடாசினேன் பர்ஸ்ஸை.

“இருக்கற சில்லறைக்கு பர்ஸ் ஒண்ணுதான் குறைச்சல்"

என் மனைவி அதைப் பொறுக்கி வைப்பாள்.பர்ஸ் வச்சிக்கவே கூடாது என்று எத்தனையோ தடவைகள் முடிவு செய்து அதை அவள் தான் மாற்றவைத்திருக்கிறாள்.

என் பைக் சரமாரியான உதைகளை வாங்கியும் மெதுவாகத் தான் நகர்ந்தது. நேற்றுத் தான் இருபது ரூபாய்க்கு பெட்ரோல் போட்டேன். 'இத வச்சு ரெண்டு நாள் ஓட்டணும்.' ஈனஸ்வரத்தில் முனகிய ஹார்ன், பேட்டரியை மாற்றச் சொன்ன மெக்கானிக்கை நினைவுபடுத்தியது.

த்ராட்டிலை முறுக்கினேன். 'மெதுவாப்போடா. விழுந்து தொலச்சா 'பேண்ட் எய்ட்' வாங்கக்கூட காசு இல்ல.' எனக்குள் நானே சிரித்துக் கொண்டேன்.

கவர்ன்மெண்ட் பள்ளித் திருப்பத்தில் நிறைய பைக்குகள் நிறுத்தப்பட்டிருக்க, வெள்ளைச் சட்டை போலீஸ்கள் கடமை உணர்ச்சியுடன் டாக்குமெண்ட்களை சரி பார்த்துக்கொண்டிருந்தனர்.

பைக்கை ஸ்டாண்ட் போட்டுக்கொண்டே, ஹெல்மட்டைக் கழற்றினேன்.பெட்ரோல் டாங்க் மேல் இருந்த பையைத் துளாவி பிளாஸ்ட்டிக் கவரை எடுத்தேன் ஆர்.சி புத்தகம், இன்ஸ்யூரன்ஸ் வகையறாக்கள் அதற்குள் தான் இருக்கும்.

"நமக்கும் மாசக்கடைசியில இப்படி அஞ்சு பத்துன்னு வருமானத்துக்கு வழி இருந்தா நல்லா இருக்கும்.” பக்கத்து பைக் காரருக்குக் கேட்கும்படி முனகி லைசன்ஸ்க்காகப் பர்ஸைத் தே..டி...னே....ன்.....